செ. கு. எண்: 061 நாள் :05.08.2015

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 5.8.2015

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ. குமாரலிங்கபுரம் கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் பணி புரிந்து வந்த தொழிலாளர்கள் 15.7.2015 அன்று மாலை பணி முடித்து வீடு திரும்பும் போது, அவர்கள் சென்ற வாகனம் சிவகாசி வட்டம், விஸ்வநத்தம் கிராமம் உட்கடை, பாறைப்பட்டி கிராமத்தின் சாலை ஓரத்தில் தடம் புரண்டு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி, டீசல் டேங் வெடித்து தீ விபத்து ஏற்பட்டதில், வாகனத்தில் பயணம் செய்த கீழத்திருத்தங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மனைவி திருமதி காளியம்மாள், திரு. கருப்பையா என்பவரின் மனைவி திருமதி இருளம்மாள், திரு. ஐசக் ராஜா என்பவரின் மனைவி திருமதி பரமேஸ்வரி, திரு. முனியசாமி என்பவரின் மனைவி திருமதி விஜயகுமாரி, திரு. குருசாமி என்பவரின் மனைவி திருமதி கனகம் மற்றும் சிவகாசியைச் சேர்ந்த திரு. மதியழகன் என்பவரின் மனைவி திருமதி முருகேஸ்வரி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் எட்டு நபர்கள் தீக்காயமடைந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் வருத்தமடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**